CONNEMARA PUBLIC LIBRARY
17 JUN 1968
MADRAS

# எழுத்தாளன்

தமிழ் எழுத்தாளர்களின் சொந்தப் பத்திரிகை

EZHUTHALAN WRITERS' OWN PUBLICATION

TAMIL & ENGLISH MONTHLY

FORMERLY THE WRITER

ஆசிரியர் அ.வெ.ர. கிருஷ்ணசாமி

உலகமெனும் பெருவியப்பை
உலகில் மாந்தர்
உயிர்வாழத் துடிக்கின்ற
முனைப்பில் தோன்றுங்
கலகத்தைச், சிறுபிணக்கைக்
காதல் என்னும்
கவினுறும் இன்பத்தைக்
கூடி வாழும்
நிலைபேற்றை நிதம்ஆய்ந்து
ஆய்ந்து மற்றும்
நினைவயர்ந்து குமைகின்ற
மானுடத்தின்
குலமுயரக், குணமுயரக்
கொடிதான் ஏந்துங்
குறிகொண்ட எழுத்தாளர்
ஓர் குலத்தார்.

கனவு 11 கற்பனை 6] திருச்சி 15—6—68 [ தனிப் பிரதி 25 காசு

சன்மார்க்க சங்கம்

# ஜோதி இராமலிங்கம்

## தலைமைக் கவிதை

[அ. வெ. ர. கிருஷ்ணசாமி ரெட்டியார்]

### விண்ணப்பம்

எல்லாருடைய அருட்பெருஞ்ஜோதி இறைவா!
இன்றுமுதல் எக்காலத் தெம்மனத்தில் வந்து
பொல்லாத மதமார்க்க சமயஆசார, சங்கற்ப விகர்ப்பம்
புகாது தடுத்தாள கருணை செயவேண்டும்
எல்லோரும் சமமென்னும் சமரச சன்மார்க்கம்
இலட்சியமாம் ஆன்மநேய, ஒருமைப்பாட்டு ணர்ச்சி
எல்லா நிலைகளிலும் எக்காலத் தெவ்விடத்தும்வந்து
எம்இதயத்தில் நிறைந்தொளிர அருள்புரியவேண்டும்.

அருட்பெருஞ்ஜோதி ஆண்டவனே! நின்
திருவருட் கருணைக்குத் தலைதாழ்த்துகின்றோம்
அருட்பெருஞ் ஜோதி! அருட்பெருஞ் ஜோதி!
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ் ஜோதி!

### குருவணக்கம்—சந்தம்

திருவுற்ற செந்தமிழ் அருளூற்று ஒளிபெற்ற
திருவருட்பா தந்த ஜோதியை—வடலூர்
திகழ்ந்திடும் அருட்பெருஞ் ஜோதியை.
மருளற்றிட நினைந்து மனத்திற் களிசிறக்க
வண்ணத்தமிழ் கொண்டு வாழ்த்துவோம்—அவர்
வகுத்த சன்மார்க்கத்தில் கூடுவோம்.

பொருளற்ற வாழ்க்கையின் போக்கைக் கரைகட்டி
அருள் பெற்றுய்ந்திடத் தேக்குவோம்—இனி
அருட்பெருஞ்ஜோதியை யேற்றுவோம்.

குருவாக அருட்ஜோதி உருவாகி நம்உளக்
குறிகாட்டி நம்மையே வாழ்த்துவார்—தமிழ்
கொட்டி கவிவலவ னுக்குவார். (திருவுற்ற)

### குரு வணக்கம்

அருளே உரு குருவேஒளி அன்பே நெகிழ்வடிவே!
உணர்வாய் நின்றகமேகுளிர் சுகமேதரு மணியே!
அருட்பாவெனும் பாமாலையால் மண்அணலே
குளிர்மழையே!
அருட்ஜோதியை உளமே தரித்தாடும் ஒளிவிளக்கே!
இருளே! உளக்குகையாம் எம் உளமே ஒளிகதுவ!
எல்லாம்நிறை வல்லான்ஒளி ஏற்ற ஒளிச்சுடரே
குருவே நிறை வடலூர்பதி குறிகாட்டிய குருவே!
கோவே நின், அடி சூடினேன், நாகொலுவே,
கொளவாராய்.

### திருப்புகழ்

அருளாடும் செந்தமிழ் அலைவீச-ஞான
அருட்சோதி முடியேற்றி அனல்தாவ
நெடிவான் நிலம், நீர், தீ, வாயு—அதன்
நெடியாலே பொடியாக்கி எடைபோட்டு
உருவான உடற்கூட்டின் உலையேற்றி—அதை
ஊதாத கால்கொண்டு சூடேற்றி
அருளாளன் திருகூத்தை உட லூரின்-சித்
தம்பலத் தரங்கினில் கண்டுவந்து
பருவான தேகத்தை அணுவாக்கி—வான்
பாரெல்லாம் நிறைவித்து நடமாடும்
அருளான இராமலிங்க குருநாதா!
அருட்ஜோதி ஆண்டஎம் பெருமாளே!

## வேறு

புல்லதுவும், கல்லதுவும், பெயர்ந்தறியா பயிரினமும்
புலம்பல் கண்டாங்கு
கல்லுக்கும் புல்லுக்கும் கசிந்துருகித் தமிழ்பாடி
கனகசபை ஜோதி தன்னை
வல்லானே வருத்தமது தீர்த்தருள வருகவென
அழைத்தமணி வடலூர் தேவே!
எல்லையில்லா கருணைமழை முகிழ்த்தருளும் தமிழ்கடலே!
இராமலிங்க நமவெனவே! ஏற்றி வாழ்வோம்.

வள்ளலார் தந்தநெறி மாந்தரெலாம் கண்டு
மனம்மாறி நேர்மைவழி வாழ்ந்திடுதற்காக
தெள்ளுதமிழ்க் கவியரங்கில் இறைபக்தி நேயம்
ஜீவகாருண்ய நெறிஎனப் பிரித்துப்பார்த்து
வெள்ளைமனம் உடைய கவிவாணர் தமைக்கூட்டி
விரித்துக் கவி தெளிந்தறிந்து கொணர்கவென்றிட்டார்
வள்ளல் பிரான் தன்னருளால் தெள்ளுதமிழ் வாணர்
வகையாக "சிவயநம" கவி வழுத்துவாரே!

## முடிவுரை

அகங்கறுத்த உலகினரை சகத்தினிலே திருத்தி
அன்பென்னும் நீரதனால் அகவீட்டைக் கழுவி
அகல்விளக்காய் அறிவொளியை ஆங்கேற்றி வைத்து
அனைத்துயிரும் ஒன்றென்னும் ஒளிஞானம்காட்டி
இகழ்ச்சியதும் புகழ்ச்சியதும் இலாதான்ம நேயம்
இணைந்திந்த உலகுயிர்கள் ஒத்துரிமை யோடு
மிகச் சிறந்த வாழ்க்கைநெறி வாழ்ந்திடவே செய்ய
வியன்கருணை அருட்ஜோதி இராமலிங்க மானார்.

நானுரைத்த வார்த்தையென மயங்காதீர் உலகீர்
நாதன்சிவன் தானுரைத்த வார்த்தையிது கேளீர்!
ஏனுரைத்தேன் இரக்கத்தால் எடுத்துரைத்தேன் உங்கள்
இதயமலர் மலர்ந்திடவே இயம்புகிறேன் கேளீர்!
வானுலகு மணிமன்றில் திருநடனம் செய்யும்
வள்ளல்பிரான் அருட்ஜோதி அருள்பெறவே நீவீர்
மானுயர்ந்த ஜீவதயை ஆன்மநேயம் கொண்டு
வருகவென அழைத்திட்டார் வடலூர் குருநாதர்!

கங்கையொடு காவிரிநீர் ஆடிடவும் முனைவீர்
காசினியில் உடலழுக்கைப் போக்கிடலாம் நீரால்
தங்குமுடல் உள்ளிருக்கும் அழுக்கெல்லாம் போக்கத்
தண்ணீரால் முடிந்திடுமோ! கண்ணீரைத் தேக்கி
எங்குநிறை அருட்ஜோதி தன்னைமன திருத்தி
ஏங்குகின்ற உயிர்குலத்தை நினைத்துநினைத்தழுது
அங்கமதின் உள்ளிருக்கும் அழுக்கெல்லாம் அகல
அன்பென்னும் யமுனைபுனல் ஆடிடலாம் வாரீர்!

கடமிருந்து பெருகிவரும் காவிரியின் நீரைக்
கண்டிந்த உயிர்ப் பயிரைக் காத்திடவே தேக்கி
வட திசைக்குக் காவிரியும் தென்திசைக்குக் கங்கை
மாநதிகள் பாய்ந்துவர குண்டலியாம் கரையை
தடமாக்கி ஏழ்மதில்சூழ் உடலரங்கம் தன்னில்
சார்ந்த சக்ர ஆறதனில் குடிபுகுந்த வாசி
உடற்கூட்டில் விளையாட அம்பரமே மேவும்
ஒளியாற்றில் உள் அழுக்ககல மூழ்கிடலாம் வாரீர்!

தான் என்ற சிறுகுடிலில் தவிக்கின்ற உலகீர்
தான்என்ன நான்என்ன தறுக்குற்றே அழிவீர்
தானே இவ்வுலகமதும் உயிர்குலமே எல்லாம்
தான்அன்றி வேறில்லை எனஉணர்ந்துகொண்டு
வான்மீதில் வீற்றிருந்து ஒளிகதுவி நிற்கும்
வளர்சுடரும் தேய்மதியும் நம் மாற்றலென்று
ஏனோதான் அறியாது மதிமயங்கி கீழ்மை
இடருற்று அழிகின்றீர் எனதடுத்தார்ஐயா!

உலகியலில் உயிரெல்லாம் உடன்பிறப்பென் றோர்ந்து
உயிர்கட்கே உபகரிக்கும் உத்தமர் செயல்யாவும்
நிலவுகின்ற எம்பெருமான் திருவுளத்தின் செயல்கள்
நேர்ந்தறிந்தேன், மாற்றுங்கண், எவ்வுயிர்க்கும்
குலவுகின்ற அன்பதனால் கசிந்துருகி வாடிடுவோர் உள்ளம்
கோவிலென யான் உணர்ந்தேன் சன்மார்க்கம் வாழ்ந்து
தலமிசையே சத்தியத்தை எவ்வுயிர்க்கும் ஓதும்
சான்றோர்கள் சொற்களெலாம் ஆகமத்தின்
சத்தெனவே தேர்ந்தேன்

என உரைத்து அருட்ஜோதி இராமலிங்க வள்ளல்
இறைவன்செயல் இருப்பிடமும் வாக்கியமும் தேர்ந்து
மனம்நிறையும் தமிழ்ச்சொல்லால் தெளிந்துரைத்த
வார்த்தை
மனதிருத்தி கசிந்துருகி உயிர்க்குலமேவாழ
தினந்தோறும் அருட்பணிபூண்டு செயல்பல வாற்றி
சிவமொன்றே உளதென சிந்தையிலே தேறி
சினம்தாபம் வீண்விருப்பம் புழுக்கமொடு அச்சம், உளம்
சேராது அருட்சுடர்காண தியானிப்போம் வாரீர்.

உயிர்க்கொலையும் புலைஉணவும் விட்டொதுக்கி வாழ்வீர்
உற்றவர்கள் துயர்துடைத்து அன்பதனால் நெகிழ்ந்து
வயிற்றுக்காய் வாழ்க்கையிதா! மயக்குக்கா வாழ்க்கை?
வட்டிபெருக்கித் தனம்சேர்த்து கொட்டிவைக்கத்தானோ?
அயலவர்கள் சுகம்திருடி மயல்பெருக்கி வாழ்ந்து
அழிவதற்கோ இவ்வுடலம் ஆய்ந்துணர்ந்து பாரீர்
துயிலகற்றி விழித்தெழுந்து அருட்ஜோதிகாண
செத்தவரே பிழைத்தெழுவீர் எனஅழைத்தார் ஐயா!

எத்தனை எத்தனை விதமாய் இராமலிங்க வள்ளல்
எந் தமிழர் வாழ்வுபெற தமிழ்பாடி வைத்தார்
அத்தனையும் அறியாமல் தமிழ்க்குலமே தாழ்ந்த
அவலநிலை உணர்ந்தறிந்தால் உளம் நைந்து வேகும்
சித்துருவில் இத்தரையில் ஜோதிஇராம லிங்கம்
தியானிப்பார் சிந்தையினில் கொலுவமர்ந்து நிற்பார்
சத்திய சன்மார்க்கநெறி பக்தியுடன் வாழ்வோர்
தம்கனவில் ஜோதிஇராம லிங்ககுரு வருவார்.

அருளாளர் வடலூரின் தவராஜ யோகி
அருட்ஜோதி இராமலிங்கர் பொன்னடிகள் போற்றி
மருளகற்றி அருள்வேட்டு அன்புநெறியோடு
மனிதகுலம் வாழ்ந்திடுக என்றுரைத்த தேவன்
ஒருநாளும் அழிவின்றி விண்கலந்த மூர்த்தி
உத்தரஞான சிதம்பரத்தை உருவகித்தநாதன்
திருவடிகள் கண்ணிலொற்றி கவிமாலை சூட்டி
தியானித்து தினம்தொழுவோம் குருவாழ்கவென்றே.

ஓம். ஓம் ஓம்.

எழுத்தாளன்

கனவு 11] கீலக, ஆனி (15-6-68) [கற்பனை 6

# எழுத்துச் சீர்திருத்தம்

தமிழ் மொழியை உலகமெலாம் பரப்பும் செய்கையில் நாம் தீவிரமாக ஈடுபடவேண்டிய காலம் வந்துவிட்டது. மொழித் தொண்டு செய்யவேண்டிய காலகட்டத்தில் இருந்துவருகிறோம்.

வெளிநாட்டிலிருந்து வரும் ஒருவர் "வணக்கம்" என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டால் போதும் ஆனந்தப்படுகிறோம்; கைதட்டி மகிழ்ச்சியைத் தெரிவிக்கிறோமே தவிர, தமிழ் மொழியை பரப்புகின்ற தொண்டிலே நாம் ஈடுபடவில்லை. வங்க மொழியினருக்கு தமிழ் கற்றுக்கொடுக்க வங்க அரசாங்கத்தின் துணையுடன் வங்கத் தமிழர் திரு. சாஸ்திரி அவர்கள் வெளியிட்டிருக்கும் நூலைப்பற்றி தமிழர் பெரும்பாலோர் அறிந்திருக்கமாட்டார்கள். அதேபோல, ஹிந்தி மொழியினருக்கு தமிழ் சொல்லிகொடுக்க திரு. சௌமிய நாராயணன் எழுதிய துணை நூலைப்பற்றியும் பலருக்குத் தெரியாது.

இதுவரை நாம் தமிழ்மொழியை பரப்புவதற்கு செய்திருக்கும் தொண்டு என்ன? மேடையைப் போட்டு, பட்டிமன்றம், கருத்தரங்கம், கவியரங்கம், சொற்பொழிவு, இலக்கிய பிரசங்கம் செய்திருப்பதைத் தவிர ஆக்கபூர்வமான வேலைகள் என்ன செய்திருக்கிறோம் என்பதை ஒவ்வொரு தமிழ் தொண்டரும் சிந்திக்க வேண்டுகிறோம். தமிழ் எழுத்தாளர்களின் ஓயாத உழைப்பினாலும், இலவசக் கல்வியினாலும் ஓரளவு தமிழ்க்கல்வி வளர்ந்திருக்கிறது என்று கூறலாம்.

தமிழ்மொழியில் உயிரெழுத்து பன்னிரண்டும் மெய்யெழுத்து பதினெட்டும், உயிர்மெய் எழுத்து 216ம் வடமொழி ஒலிக்காக தமிழர்கள் உருவாக்கிய கிரந்த எழுத்து ஐந்தும் ஆக 251 எழுத்துக்களை ஒவ்வொரு தமிழ்க் குழந்தையும் படிக்கவேண்டியிருக்கிறது. இவைகளை மனதில் வைத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. வெளிநாட்டார் தமிழ்மொழியிலுள்ள 251 எழுத்துக்களை மனதில் வைத்துக்கொள்ள சங்கடப்படுகிறார்கள் என்பதை தமிழ் அறிஞர் பெருமக்கள் அவ்வப்போது உணர்ந்து எழுத்து சீர்திருத்தம் செய்யவேண்டுமென்று உத்வேகத்தோடு எழுகிறார்கள் முடிவில் என்னவோ கிணற்றில் கல்போட்டதுபோல அலை மோதவிட்டு ஓய்ந்துவிடுகிறார்கள்.

ஆதிசிவனால் படைக்கப்பட்டது நமது தமிழ் என்பது நமது நம்பிக்கை. இன்றிருக்கும் வரிவடிவம் தொன்று தொட்டே இருந்துவருகிறது என்பது நமது நம்பிக்கை. இதில் ஏதாவது மாறுதல் செய்தால் அது தமிழ்பக்திக்கு குறைவு ஆகிவிடுமோ என்ற அச்சமும் ஒரு பக்கத்தில் இருக்கிறது. தெய்வப்புலவர் திருவள்ளுவர், கவிச் கவிச்சக்கரவர்த்தி கம்பர், மூவாயிரம் சொன்னமூலர், இன்று திரும்பிவந்தால் இங்கிருக்கும் தமிழ் வரிவடிவங்களைப் பார்த்து இது என்னமொழி என்று கேட்பார்கள். காலத்தால் தமிழ் வரிவடிவம் மாற்றப்பட்டு வந்திருக்கிறது ஆதார பூர்வமான வரலாறும். தமிழ் எழுத்துக்களை சில மாறுதல்கள் செய்தால் திருமூலர் குறிப்பிட்ட ஐம்பத்தோரு அட்சரங்களுக்குட்பட்டு சுமார் 46 எழுத்துக்களில் தமிழ் வரிவடிவங்களை அமைத்துவிடலாம். தட்டெழுத்துக்கும் இது மிக உதவியாக இருக்கும். அன்னியர் தமிழ் மொழியை படிப்பதற்கும் துணையாக இருக்கும். சுலபமாக இருக்கும். இதுபற்றிய அறிஞர்கள் கருத்தை எழுத்தாளனில் வரவேற்கிறேன். அடுத்த இதழில் இதுபற்றிய கட்டுரை ஒன்று வெளிவர இருக்கிறது. தொடர்ந்து பலர் எழுதவேண்டும் என்பது என் வேண்டுகோள்.

*அ. வெ. ர. கிருஷ்ணசாமி.*

# அமரர் கானகலாதரர்

கானகலாதரர் மதுரை மணி அய்யர் அவர்கள் தெய்வீக பதவி அடைந்ததைக் கேட்டு தமிழ்ப் பெருமக்களுடைய உள்ளங்கள் சஞ்சலமடையும். நாதோபாசனையினாலே வாழ்ந்துவந்த மகான் ஸ்ரீ மணி அய்யர் ஆகும். சங்கீத உலகில் தனக்கென ஒரு தனி பாணியையும் வகுத்துக்கொண்ட பெரியார். அய்யர், கச்சேரிகளில் அமர்ந்து உபாசனையை தொடங்கிவிட்டால் ஒரு யோகியின் தன்மையை அவர் அடைந்துவிடுவதுண்டு. கானமிருதத்தை அமிர்ததாரையாக கேட்கின்ற பல்லாயிரக்கணக்கான ரசிகர்களின் உள்ளத்திலே பெய்து களிகொள்ளும்படி செய்யும் அவரது நாதப்பிரம்மம் நம் கண்முன் மறைந்துவிட்டது என்றாலும் அதைக் கேட்டுக்கேட்டுப் பழகிய லட்சோப லட்ச உள்ளங்கள் ஒருநிமிட மௌனத்திலே அந்த நாத வெள்ளம் மீண்டும் வந்து கலப்பதை அனுபவித்துக் கேட்கலாம். மகாத்மா காந்தியடிகளை தனது லட்சிய புருஷராக கொண்டு யாவருடனும் கலந்து மகிழும் அந்தப் பெரிதயம் நம்மைவிட்டு மறைந்துவிட்டது. தமிழ் எழுத்தாளர்களின் நலனிலே ஸ்ரீ. மணி அய்யர் அவர்கள் கொண்ட ஆர்வம் அமரர் கு. ப. ரா. அவர்களது நினைவாக ஏற்படுத்தப்பட்ட நிதிக்கு உறுதுணையாக இருந்த அவரது தியாக உணர்வு எடுத்துக்காட்டும், சங்கீதத்துறையில் மட்டுமல்ல, தனது அன்புக்குரிய எழுத்தாளர் அன்பர்களை சந்திக்கும்போதெல் அவர் பேசுகின்ற பேச்சு இலக்கியச் சுவைநிறைந்ததாக அமையும். நாளெல்லாம் கேட்டு மகிழவேண்டும் என்று பழகிய உள்ளங்கள் நாளெல்லாம் தவிக்கும். வார்த்தைகளை சிதைப்பதோ, ராகத்திற்காக வார்த்தைகளை மெல்லுவதோ, மணி அய்யர் அவர்களிடம் காணமுடியாது.

(கடைசி பக்கம் பார்க்க)

# செந்தமிழும் சேக்கிழாரும்

பேராசிரியர் திரு. கா. பொ. இரத்தினம், M.A., B.O.L.

சேக்கிழார் பெருமான் இயற்றிய பெரிய புராணத்தைத் தெய்வமணங் கமழும் நூல் என்பர் அறிஞர். நுணுகி யாராய்ந்தால் அது செழுந்தமிழ் மணங்கமழும் நூலாகவும் விளங்குகிறது. செந்தமிழுக்குப் பெருமையளிக்கும் நூல்களில் அது முதலிடம்பெற்று விளங்குகிறது.

சைவத் திருநெறி, தமிழர்கண்ட பெருநெறி. சைவமுந் தமிழும் பிரிப்பறியாதன. சைவநெறியைத் தமிழிலிருந்து பிரித்தமையால்தான் பிறநெறிகள் தமிழகத்திலே தலைகாட்டத் தொடங்கின. நால்வர் பெருமக்கள் சைவத்தைத் தமிழுடன் பிணைத்து என்றும் பிரியாதிருக்கச் செய்தனர். இப்பிணைப்பை நன்கு உணர்ந்த சேக்கிழார் பெருமான் இப்பிணைப்பு என்றும் நிலைத்துநிற்க வேண்டுமென்று கருதி, இதனைத் தம் பெருங்காப்பியத்தில் வலியுறுத்தியுள்ளார்.

தொண்டர்சீர்பரவவந்த சேக்கிழார் தமிழின் சிறப்பையும் விரிவாகப் பகர்ந்துளார். இந்த உலகத்திலுள்ள மொழிகளிற் சிறந்தது தமிழ் மொழியே என்று அவர் உணர்ந்தார்; எல்லா மொழிகளையும் அது வென்று வாகை சூடவேண்டும் என்று ஆசைப்பட்டார்; அஃது அழியாது என்றுஞ் செழிக்கும் தன்மையது என்று அறிந்தார்; அதன் இனிமையிலே தம் உள்ளத்தைப் பறிகொடுத்தார். பெரிய புராணத்தைத் தமிழின் சீர்பரவும் புராணமாகவும் ஆக்கியருளினார்.

தமிழின் உயர்நிலையை உணரும் பெரும் புலவர்கள் அதன் தனிச் சிறப்புக்களிலே தம் உள்ளத்தைப் பறிகொடுப்பது பண்டும் இன்றும் உள்ள வழக்கம். "இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர் விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்" என்றார் ஒரு புலவர்; "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்குங் காணோம்' என்றார் புதுமைக் கவிஞர் பாரதியார். சேக்கிழார் பெருமான் தமிழைப்பற்றிக் குறிப்பிடும்பொழுதெல்லாம் தம் ஆராமையைப் புலப்படுத்தும் அடைகளை அடக்கி உணர்ச்சி ததும்ப உரைத்திருக்கிறார். "செழுந்தமிழ்", "சொல்லார் தமிழ்" "தெய்வத் தமிழ்", "நற்றமிழ்". "வண்டமிழ்", "அருந்தமிழ்", "தண்டமிழ்", "இன்றமிழ்", "மல்லல் நெடுந்தமிழ்". "ஞாலம் அளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" முதலியன யாவும் சேக்கிழார் திருவாக்குகளாகும்.

தமிழை இவ்வுலகிலே தலைநிமிர்ந்து வாழச்செய்த பெருமை தேவார திருவாசகங்களை அருளிச் செய்த நாயன்மாருக்குரியது. அழகு கொழிக்கும் இன்பத் தமிழிலே அளவிறந்த பாடல்களை இயற்றித் தமிழுக்குச் சமயத் துறையிலும், இசைத் துறையிலும், இலக்கியத் துறையிலும் ஈடிணையற்ற பெருமையை அளித்தவர்கள் அவர்கள். பிறமொழியும், பிறசமயங்களும் தமிழ்நாட்டை நசுக்கிய காலத்திலே தமிழையும், தமிழர் நெறியாம் சைவத்தையும் காத்துப் போற்றி என்றும் நிலைக்கச் செய்தவர்கள் அப்பெருமக்கள். சங்கப் புலவர்களின் பின்னர் தமிழ்மொழித் தலைவர்களாகத் தமிழ்மொழி வேந்தர்களாக விளங்கினவர்கள் அவர்கள் என்பதைத் தமிழ் இலக்கிய வரலாற்றை நன்கு அறிந்தவர்கள் உணர்வார்கள். இந்த உண்மையைச் சேக்கிழார் பெருமான் பெரியபுராணத்திற் பல இடங்களில் புலப்படுத்தியுள்ளார். தேவாரங்களை அருளிச் செய்த நாயன்மார்களைக் குறிப்பிடும்பொழுது அவர்களுடைய ஒப்புயர்வற்ற தமிழ்ப் புலமையையும், தமிழ் என்றும் நிலைத்தோங்க அவர்கள் செய்த தொண்டினையும் புலப்படுத்தும் பட்டப்பெயர்களால் அவர்களைப் போற்றுந்திறன் எண்ணி எண்ணி இன்புறத்தக்கது.

திருநாவுக்கரசரை "இன்றமிழ்க்கு மன்னான வாகீசர்", "தமிழ் வேந்தர்", "தமிழாளியார்", "தமிழ் மொழித் தலைவர்", "இன்றமிழீசர்" என்று பலவாறு அவர் வியந்துள்ளார்.

"முத்தமிழ் விரகன்", "இயல் இசைத் தலைவனார்", "மதுரை முத்தமிழ் வாசகர்" .........முதலியன திருஞானசம்பந்தருக்கு அவர் அளித்த பட்டங்கள்.

"வண்டமிழ் நாவலர்", "நற்றமிழ் நாவலர் கோன்", 'நாவலர் காவலர்' முதலிய சொற்றொடர்களால் அவர் சுந்தரரைப் பாராட்டியுள்ளார்.

தமிழிடத்தும், தமிழ்நாட்டிடத்தும், தமிழரிடத்துஞ் சேக்கிழார் கொண்ட பற்றினைப் பல பாடல்கள் நமக்குப் புலப்படுத்துகின்றன. "தமிழ் என்றால் இனிமை; தமிழர் என்றால் இனியவர். தமிழர் நாட்டிலே மறச்செயல்களுக்கு இடமில்லை" எனும் இக்கருத்துக்களை எல்லாம் அவர் தென்றற்காற்றை வினவும் ஒரு வினாவிலே பொதிந்து தம் இனப்பற்றைக் காட்டுகிறார். "மறம் பயின்றது எங்கோ தமிழ்மாருதம்?" எனும் வினாவே அவ்வினாவாகும்.

இக்காலத்திலே தமிழ்உணர்ச்சிமிக்கார் வெளிப்படுத்தும் முற்போக்குக் கருத்துக்களுக்கெல்லாம் வித்திட்ட பெருமை சேக்கிழார் பெருமானுக்குரியது. தமிழர் சிறந்து வாழ்தல் வேண்டும்; தமிழ்நாடு உயர்ந்து பொலியவேண்டும்; தமிழ்மொழி எத்துறையிலும் எம்மொழிக்கும் குறையாமல் தழைத்து வளரவேண்டும். சமயத் துறையிலே வடமொழியுடன் ஒப்பிடும்பொழுது அதற்கு உள்ள குறைகள் நீங்கி ஓங்க வேண்டும்; தமிழே தமிழர் வழிபாட்டு மொழியாக வேண்டும்; என்று அவர் உள்ளம் துடிதுடித்தது. இந்தத் துடிப்பை அவருடைய காவியத்திலேயுள்ள பல செய்யுட்கள் தெள்ளத்தெளியக் காட்டுகின்றன.

இந்த உலகத்திலே ஒப்பற்ற சிறந்த மொழியாக வேண்டுமெனத் தமிழ் தவஞ் செய்தது எனவும், அத் தவம் நிரம்பத் திருஞான சம்பந்தர் தோன்றினார் எனவும், தமிழை அவர் எங்கும் விளங்கவைத்தார் எனவும், அவர் "நாளும் இன்னிசையால் நற்றமிழ் பரப்பினார்" எனவும் சேக்கிழார் கூறியுள்ளார். "வண்தமிழ் செய்தவம் நிரம்ப", "தென்றமிழ் விளங்கவந்த திருக்கழுமலத்தான்", 'தீந்தமிழுஞ் சிறக்கவரு நாயகன்" என்பன சேக்கிழார் வாக்குகள்.

தமிழ்நாடு பன்னூருண்டுகள் அடிமைப்பட்டுக் கிடந்தமையால் தமிழ்மொழி இன்று பல துறைகளில் வளர்ச்சிகுன்றிப் பிறமொழிகள் சிலவற்றுடன் போட்டியிட முடியாதநிலையில் உள்ளது. தமிழ் ஆட்சிமொழியும் கல்விப்பயிற்சி மொழியுமாகி உலக அரங்கில் இடம்பெறும் நிலைமை வந்தால் மீண்டும் அது பிறமொழிகளை வென்று வரும் வாய்ப்பினைப்பெற வழி பிறக்கும். இந்த வாய்ப்பு உண்டாதல் தமிழ் மக்களின் முயற்சித்திறனையே பெரிதும் பொறுத்துள்ளது.

இப்பொழுது தன் முதன்மை இழந்திருக்கும் தமிழ்மொழி முன்னர் முழு உலகத்திலுமே சிறந்த மொழியாக விளங்கியது. தமிழ் வளர்ச்சியின் பொற்காலமாகிய சங்ககாலத்தின் பின் சிறிது தளர்ச்சி அடைந்த தமிழ்மொழி கி. பி. ஏழாம் நூற்றாண்டில் ஒப்புயர்வற்றதொரு முதன்மையுடைய மொழியாக விளங்கிற்று. நமது கற்பனையைப் பயன்படுத்திக் கி. பி. ஏழாம் நூற்றாண்டுக்குச் சென்று அப்பொழுது பொதுவாக உலகம் இருந்த நிலைமையையும், சிறப்பாக இந்தியா இருந்த நிலைமையையும் நாம் கருதல்வேண்டும். மொழிக்குமொழி தித்திக்கும் தேவாரங்களைப்போன்ற பாடல்களை அக்காலத்திருந்த எந்தமொழியும் பெற்றிருக்கவில்லை. தமிழ் மறைகளாகவும், தமிழிசைப் பாடல்களாகவும், இலக்கியச் செல்வங்களாகவும் பொலியும் தேவாரங்களின் சிறப்பியல்புகளையும் அவை அக்காலத்திலே தமிழ் நாட்டில் உண்டாக்கிய புத்துணர்ச்சியையும், தமிழ்ப்பற்றையும், சிவநெறியாக்கத்தையும் நன்கு அறிவோர் அக்காலத்திலே தமிழ்மொழி அடைந்த தனிப்பெருமையைச் சேக்கிழார்போல உணர்வார்கள் என்பதில் ஐயமில்லை. தாம் உணர்ந்ததைச் சேக்கிழார் வேறெவரு உரைக்கமுடியாத தனிச் சிறப்புடைய முறையில் எடுத்துரைத்துள்ளார்.

"திசையனைத்தின் பெருமை எலாம் தென்
[திசையே வென்றேற,
மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல,
அசைவில்செழுந் தமிழ்வழக்கே அயல்வழக்கின்
[துறைவெல்ல
இசைமுழுதும் மெய்யறிவும் இடங்கொள்ளும்
[நிலைபெருக"த்

திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்தார் என்று சேக்கிழார் தம் உள்ளந்தளிர்ப்ப உணர்வுபொங்கப் பாடுகிறார். இவருடைய இக்கூற்று உயர்வு நவிற்சியன்று என்பதை வலியுறுத்த வேண்டியதில்லை.

திருஞானசம்பந்தர் தோன்றியதால் திசைகள் எல்லாவற்றையும் தென் திசையே வென்றுவிட்டதெனவும், வானுலகையும் பிறவுலகங்களையும் இவ்வுலகு வென்றுவிட்டதெனவும் சேக்கிழார் கூறியிருக்கின்றார். இது ஆராய்ச்சிக்கு இடங்கொடுக்கத்தக்கதன்று என்று கருதுவோர் இதனைக் கவிமரபெனக் கொள்ளலாம். "அத்திருநாட்டினை அண்டர்நாடு ஒத்திருக்குமென்றால் உரை ஒக்குமோ? எத்திறத்தினும் ஏழுலகும்புகழ் முத்தும் முத்தமிழும் தந்து முற்றுமோ" என்று தமிழ்நாட்டைப்பற்றிக் கூறினார் கம்பரும். 'அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல' எனுங் கூற்று உண்மை பொதிந்த கூறறு. இன்று தமிழுக்கு அயலுள்ள மொழிகள் மலையாளம், தெலுங்கு, கன்னடம் சிங்களம் முதலியனவாகும். கி. பி. ஏழாம் நூற்றாண்டிலே, திருஞான சம்பந்தர் காலத்தில் இவை தமிழுடன் போட்டியிடவில்லை, இவறறிற் பல அப்பொழுது இலக்கிய வளத்தைப் பெறவுமில்லை. எனவே சேக்கிழார் அயல் வழக்கு என்று குறிப்பிட்டது தமிழுடன் போட்டியிட்ட வடமொழி வழக்கையே என்க.

ஒரு நாட்டில் ஓரினமக்களிடையே அவர்களுடைய தாய்மொழி முதலிடம் பெறுவதேஇயல்பு. இத் தாய்மொழியை அடக்கி ஒடுக்கித் தம் மொழிக்குத் தலைமையிடம் கொடுப்பதற்கு அவ்வினத்தை அடிமைப்படுத்தி ஆளுவோர் முயல்வது உலக வரலாறு கூறும் உண்மை. சமயத்துறை வாயிலாகவும் சில மொழிகள் தாய்மொழிகளை அடக்கி ஆட்சி செய்திருக்கின்றன. இவற்றையெல்லாம் நீக்கித் தனி ஆட்சிசெய்யும் நிலையைத் தமிழுக்கு அளித்தவர் ஞானசம்பந்தர் என்பதே சேக்கிழார் கருத்து. இதனைப் புலப்படுத்தவே அவர் "அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்கின் துறை வெல்ல" என்று உரைத்தார்.

தமிழ்மொழி அரசியற்றுறையிலோ, சமயத்துறை, இசைத்துறையிலோ என்றும் அசையாது; அழியாது என்பதையும், இதற்குக் காரணம் அதன் செழுமையே—வளமே என்பதையும் சேக்கிழார் "அசைவில் செழுந்தமிழ்" எனுந் தொடராலே நமக்கு உணர்த்தியருளியுளர். இக்கருத்தைக் கம்பரும் இரத்தினச் சுருக்கமாக "என்றுமுள தென்றமிழ்" என்று கூறி வலியுறுத்தியுளர். 'கன்னித்தமிழ்' என்று தமிழைப் புலவர்கள் போற்றுவதற்கும் அதனுடைய என்றும் அசையா இயல்பும் குன்றாச் செழுமையுமே காரணங்களாகும்.

சேக்கிழார் பெருமான் தமிழர்கள் மறந்திருந்த ஓருண்மையைத் தமிழர்களுக்கு எடுத்துக்காட்டித் தமிழ்நாட்டிலே சமயத்துறையிலே ஒரு திருப்பத்தை உண்டாக்க முயன்ற பெருந்தகையாகவும் விளங்குகிறார். வடமொழியிலேதான் வேதங்களும், ஆகமங்களும்உள. தமிழிலே அவை இல்லை என்று கூறுவாருக்குச் சேக்கிழார் விடை கூறிவிட்டார். சைவ சமயக் கடவுளாகிய சிவபெருமான் ஆணையாலே தமிழிலே மறைகளும், ஆகமமும் ஆக்கப்பட்டுள என்பதையும் தமிழுக்கு இனி எவ்விதக் குறையும் இல்லை என்பதையும் அவர் பல இடங்களில் புலப்படுத்தியிருக்கிறார்.

"மிக்கசொற்றமிழினால் வேதமும் பாடினார்"
"எழுதுமறை மல்லல் நெடுந் தமிழால்
[இசைத்தார்"

என்பன திருஞானசம்பந்தர் புராணத்தில் வருந்தொடர்கள்.

"தண்ணிலவார் சடையார் தாம் தந்த
[ஆகமப்பொருளை
பண்ணின் மிசைத் திருமூலர் வாக்கினால்
[தமிழ்வகுப்ப"

என்பது திருமூலர் புராணத்திலுள்ளது. இவற்றைப்போன்ற பல கூற்றுக்களாலே தேவாரங்கள் தமிழ்மறைகள் என்பதையும், திருமந்திரம் தமிழாகமம் என்பதையும் சேக்கிழார் பெருமான் அன்றே எடுத்துரைத்துத் தமிழினை நிறைமொழியாக-முதன் மொழியாக நிலைநாட்டியிருக்கிறார். இதனை நம் தமிழ்மக்கள் சிறிது சிந்தித்துப் பார்த்தல் வேண்டும். தமிழ் மக்கள் சைவப் பெருநெறியை அயல்மொழியின் தொடர்பின்றித் தம் தாய்மொழி வாயிலாகக் கடைப்பிடிக்க வழிகாட்டியவர் சேக்கிழார் பெருமான். நாயன்மார் காட்டிய இந்நெறியினையே சேக்கிழார் பெருமான் நிலைநாட்ட முயன்றார்.

இக்காலத்திலே தமிழிலே சமயச் சடங்குகளைச் செய்தல்வேண்டும் எனவும், தமிழிலே கோயில்களிலே அருச்சனை செய்தல்வேண்டும் எனவும் தமிழ்மக்கள் பலர் எண்ணுகிறார்கள். சிலர் இவற்றைத் துணிந்து சொல்லிச் செய்தும் வருகிறார்கள். "தென்னுடைய சிவனை — தண்ணார் தமிழ் அளிக்கும் தண்பாண்டி நாட்டானைத்" தமிழர்கள் தம் தாய்மொழியில் வணங்குதற்கு விழைதல் இயற்கைக்கு மாறானதன்று. நாயன்மார்களும் இறைவனைச் செந்தமிழிலேயே வழிபட்டார்கள். கடவுளைத் தமிழர் தமிழிலேயே வணங்க வேண்டும் என்பது தான் சேக்கிழார் பெருமானுடைய குறிக்கோளுமாகும். தாய்மொழியைப் போற்றுவது பிறமொழியை வெறுப்பதாகாது. தமிழர் எவருக்கும் பிற மொழிகளைப் பழித்தலோ அவற்றின் சிறப்பை மறுத்தலோ சால்புடைய செயலாகாது.

சுந்தரரை நோக்கிச் சிவபெருமான் 'நமக்கு அன்பினில் பெருகிய சிறப்பின்

(கடைசி பக்கம் பார்க்க)

## எட்டயபுரம் கவிஞர்களும் கலைஞர்களும்

# 7. கடிகை நமசிவாயப்புலவர்

[கி. முத்துராமகிருஷ்ணன்]

கடிகை முத்துப்புலவர் வழியில் வந்தவர்கள் கடிகை நமசிவாயப் புலவரும் இவர்கள் கல்வி கேள்விகளில் வல்லவர். இவரது பாடல்கள் சில காணக்கிடைக்கவில்லை. ஒரே பாடல் அதுவும் மணியான பாடல் ஒன்று தான் கண்டெடுக்க முடிந்தது.

எட்டயபுரம் புலவர்கள் நிரம்பிய நகர். ஒருநாள் புலவர்கள் பலர் வெளியே உலாவச் செல்கிறார்கள். இயற்கை இன்பங்கள் நுகரவும் பலவித மான விஷயங்கள்பற்றி சர்ச்சை செய்யவும் செல்கிறார்கள். உடன் கடிகை நமசிவாயப் புலவரும் சென்றார். சென்றவர் வரச் சற்று தடை ஏற்படுகிறது. மற்றவர்கள் மறுபடி இருப்பிடம் திரும்பிவிட்டனர். இவரைக் காணவில்லை. சற்று தாமதமாக வருகிறார். காரணம் என்ன அதுதான் ஒரு கற்பனை. கவிதையாக வெளிவர உள்ளது.

இளசை அரசர் வெங்கேசுர எட்டமன். அவர் ஆளுக்கே அழகன். இவரது வீரம் தீரம் பற்றி கேட்கவா வேண்டும். இவர் முதலையைச் சுட்டார். பெண்ணொ கணையாழி அணிந்த விரலால் குழலைக் கோதினாள், நீவினாள். இதனை கவியாகக் காண்க.

கரிஇட்டு அலறியே மூலமென்று ஓதகரா சுமர
அரிஇட்ட நன்கோன்துரை ராமசாமி
[அணிவரைமேல்
உரிஇட்டு உழக்கு ஆழாக்கு ஏழுழக்கு
[ஆழாக்கு உழக்குமிட்டு
சரிஇட்ட கையால் குழல் கோதினாள்ஓர்
[தாரணங்கே.

உரிஇட்டஉழக்கு என்னும் வரிக்கு மொத்தமாக மூன்று நாளி வருவதால் முந்நாளி என்று மருவும். இதனால் முந்நாளி என்பது கணையாளியைக் குறிக்கும். சரி—வளையல்.

பெண்களின் கூந்தல் மிக்க அழகுள்ளது என்பது மரபு என்றாலும் எட்டயபுரம் பெண்கள் தங்கள் கூந்தலை மெருகுபட வைத்திருப்பதும் புதிய சொருகை கொண்டு போடுவதும் இன்றும் காணும் ஒரு புதுமையாகும். இதனையே புலவர் கவியாக வடித்துள்ளார். புலவர் பலராலும் பாராட்டுப் பெற்ற கவி இது.

### 8. கடிகைப் பரமசிவப் புலவர்

இவரும் கடிகையார் காலத்தவரே. இவர் கவிதை புனைவதில் வல்லுநர். கவிஞர்களையும் அறிஞர்களையும் அரசர்களையும் போற்றுவதில் சிறந்தவர். கல்வி மிகுந்தவர். மிக நல்லவர்.

மன்னர் வெங்கடேச எட்டமன் ஆட்சி செலுத்துகிறார். இவர் பெருமை மிக்கவும் வலிமையும் திண்தோள் சிறப்பும் பெற்றவர். இவர் மீதுதான் கடிகையார் சமுத்திர விலாசம் என்ற பாடல்கள் 100 பாடி உள்ளார். இது தற்சமயம் அச்சாகி உள்ளது விளக்கவுரையுடன்.

சரி பரமசிவத்தைப் பார்ப்போம்.

மன்மதன் பொல்லாதவன். அவன் பாணம் பட்டவர் பாடு திண்டாட்டம் தான். ஒரு தடவை மன்மதன் கண், வெங்கடேசுவரன்மீது படுகிறது. மனம் சுடுகிறது. உடம்பு கொதிக்கிறது. அவன் படும்பாட்டை கவிஞர் காண்கிறார். மனம் மகிழ்கிறார்கள். தனக்கு ஓர் அழகான அற்புதமான காட்சி காணக்கிடைக்கிறது. இதனை காவியமாக ஓவியமாக தீட்ட எண்ணுகிறார். நினைத்தால் நினைத்ததைச் செய்யும் ஆற்றல் உள்ளவர்கள் தானே கவிஞர்கள். எனவே கவிதைக் களஞ்சியம் கருவாகி உருவாகிறது. பாட்டைப் பாடிப் பாருங்கள். களி பேருவகை கொள்வீர்கள்.

காற் றோன் இரும்பைஎடுத்து அன்
[முடியை நீக்கி
கம்பன் அனுமான் சுகத்தின் சிரசைக்கொய்து
மேல் திருத்தமாக வைத்து மெல்லியர் மேல்
எய்ய மையலாகி சோர்ந்தாள்
மாற்றலரை சிரந்துணிக்கும் வெற்றி வேற்கை
[மதிவதன
மன்னர் திரைகொணர்ந்து எந்நாளும்
[போற்றி வரும்மலர்பத த்தாய்
பொருளை ஆய்ந்துபுகழும் வெங்கடேசுரஎட்ட
[புகழ்சிங்கஏறே.

மன்னர் பகைவரை வெல்லும் ஆற்றலும் உள்ளவர். பகைவரின் சிரம் வீழ்த்தும் தன்மைபெற்றவர். குறுநில மன்னர்கள் கப்பம் செலுத்தும்படியான பேறுபெற்றவர். மன்மதனால் வீழ்த்தப்படுகிறார்.

கற்றோன்—தென்றல்வாகனன் மன்மதன்.

இரும்புமுடி—இ என்ற பதம்.

கம்பன்—அனுமன். சுகத்தின் சிரசு கொய்ய.

இரும்பு—அரும்பு—கரும்பு என்ற சொற்கள்வரும்.

இரும்பு-வில் கரும்பு. நாண் கரும்பு-பாணம் இதன் பின் பாணம் எய்ய.

தாமரை, சூதம், அசோகு, முல்லை, முழுநீலம் என்ற பஞ்ச பாணங்கள் ஏவப்பட்ட மக்கள் படும் அவதி உணர்க.

வெங்கடேசன் புகழ்பாடிச் சிறப்பித்த புலவர் ஏறு இவர். இந்த கவியின் சொல்நயமும் பொருள் நயமும் பாவலர்கள் அன்றும் இன்றும் என்றும் போற்றுகிறார்கள். இதனை நாமும் பாடலாம் ரசிக்கலாம் பிறருக்குக் கூறலாம். அடுத்து முத்துக் குமார் புலவர் முழக்கமிடுகிறார்.

"எழுத்தாளன்"
(மாத இதழ்)

ஆண்டுமலர் உள்பட
வருட சந்தா ரூ. 3—00
தனிப்பிரதி 25 பைசா
சிறப்பு மலர் தனி.

விபரங்களுக்கு : நிர்வாகி,
"எழுத்தாளன்"
24, தேரடிக்கடைத் தெரு.
திருச்சி-2,

# வள்ளலார் காட்டும் தத்துவம்

திருச்சி தமிழ் எழுத்தாளர் சங்கக் கூட்டம் 19—5—68 அன்று காலை 10-00 மணிக்கு ராஜேந்திரா தனிப் பயிற்சிக் கல்லூரிக் கட்டிடத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. P. இராமசாமி அவர்கள் தலைமை வகித்தார்கள். சங்கத் தலைவர் திரு. அ. வெ. ர. கிருஷ்ண சாமி ரெட்டியார் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். தலைவர் முன்னுரைக்குப் பிறகு திரு ஊரன் அடிகள் அவர்கள் ''வள்ளலார் காட்டும் தத்துவம்'' என்ற பொருள் குறித்துச் சொற்பொழிவாற்றினார்கள். சொற்பொழிவின் தொகுப்பு வருமாறு:-

வள்ளற் பெருமானாலே காட்டப் பெற்ற தத்துவம் சமரச சுத்த சன்மார்க்கத் தத்துவம். இந்த சன்மார்க்க தத்துவம் மிகவும் பழமையான ஒன்று. இதன் பழமையைச் சுட்டிக்காட்ட காலத்தின் கீழெல்லையாகத் திருமூலரைச் சொல்லலாம். திருமூலரது காலம் ஏறக்குறைய 1500 ஆண்டுகளுக்கு முந்தையதாகும். திருமூலர் மார்க்கங்களைப் பற்றிச் சொல்லும்போது சன்மார்க்கத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். வள்ளற் பெருமான் சமரச சுத்த என்ற இரண்டு அடைமொழிகளைச் சேர்த்துத் தத்துவமாகச் சொல்லுகின்றார்.

உலகச் சமயங்களில் சைவ சித்தாந்தம் உயர்ந்தது. வள்ளற் பெருமானது கொள்கைக்கு அடிப்படை சைவ சித்தாந்தமே. அவர் பிறப்பால் சைவர்.

மார்க்கங்களில் முடிமணியாகத் திகழ்வது சன்மார்க்கமே. அதிலே அவர் சமரசம் காண விரும்பினார். சாதி சமய வேறுபாடின்றி எந்நாட்டவர்க்கும் எம்மதத்தவர்க்கும் பொதுமையான சமரசத்தை நிலை நாட்ட விரும்பினார்.

மார்க்கங்கள் நான்கு வகைப்படும். அவை முறையே தாச மார்க்கம் (அடிமை நெறி), சற்புத்திர மார்க்கம் (மகன்மை நெறி), சக மார்க்கம் (தோழமை நெறி), சன்மார்க்கம் (ஐக்கிய நெறி) என்பனவாகும். இந்த நான்கு நெறிகளையும் மிக எளிமையான உவமானத்தின் மூலம் அருமையாக விளக்குகின்றார் தாயுமானவர். தாசமார்க்கம்–அரும்பு, சற்புத்திர மார்க்கம்–மலர், சகமார்க்கம் — காய், சன்மார்க்கம்–கனி.

வழிப் பயணத்திற்கு நாம் வழக்கத்தில் வைத்துக்கொண்டிருக்கிற வழிகள் கூட நான்குதானே? மண் வழி, இருப்புப் பாதை வழி, விண் வழி, நீர் வழி என்ற நான்கைத் தானே நாம் பயணத்துக்கு மேற்கொள்கிறோம். அது போல வாழ்விற்கு நெறிகள் நான்கு. அவை அரும்பாகி, மலராகிக் காயாகிக் கனியாக வேண்டும். இந்த நான்கு நிலைகளுக்கும் நால்வருடைய வாழ்க்கையைச் சான்றாகக் காட்டுவதுண்டு.

எத்துணையோ துன்பங்கள் இடையறாது வந்தபோதும் அயராது ஆண்டவனுக்குத் தொண்டு செய்வதையே வாழ்வாகக் கொண்ட அப்பரடிகளுடைய வாழ்வைத் தாச மார்க்கத்திற்கும், ஆண்டவனுடைய அன்பிற்குப் பாத்திரமாகி சிவிகையில் சென்று பொற்றாளம் கொண்டு பாக்கள் பாடி ஆண்டவனின் பிள்ளையாகவே வாழ்ந்த ஞானசம்பந்த சுவாமிகளை சற்புத்திர மார்க்கத்திற்கும், தனக்காக இறைவனே பிச்சை எடுக்கவும், தனக்காகப் பரவை நாச்சியாரிடம் தூதாகச் செல்லவும் இணக்கம் கொண்ட நட்புடையவராக வாழ்ந்த சுந்தர மூர்த்தி சுவாமிகளை சக மார்க்கத்திற்கும், தானே அவனாகி எத்துணையும் பேதமின்றி இரண்டறக் கலந்த நிலைபெற்ற மாணிக்கவாசக சுவாமிகளை சன்மார்க்கத்திற்கும் சான்றாகக் கொள்வதுண்டு.

வேதாந்தம் சித்தாந்தம் இரண்டுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக விளங்கியவர் தாயுமானவர். இராம லிங்க அடிகளுக்குத் தாயுமானவர் முன்னோடி. இருவரது கருத்துக்களும் பற்பல இடங்களிலே ஒருமைப்பட்டு நிற்பதைக் காண முடியும்.

வள்ளற் பெருமானது கடவுட் கொள்கை ஒரே இறைவன். உடலுக்கு உயிர் ஒன்றே ஒன்றுதான். அதுபோல உலகிற்கு இறை ஒன்றே.

அவரது தத்துவம் ஆன்ம நேய ஒருமைப்பாட்டுரிமை. சன் மார்க்கிகள் சாவதில்லை. அவர்கள் சாகாக் கலையுடையவர்கள்.

உலகியல் மனிதனுடைய உடல் கட்டை போன்றது. கட்டையை எரித்தால் ஓரளவு கரி மிஞ்சும். யோகியின் உடல் பஞ்சு போன்றது. பஞ்சை எரித்தால் கையள வேனும் சாம்பல் மிஞ்சும். ஆனால் ஞானியின் உடலோ கற்பூரம் போன்றது. கற்பூரம் எரிந்தால் எதுவுமே மிஞ்சுவதில்லை.

ஞானிகள் தங்கள் வாழ்வில் சாவினைச் சந்தித்ததில்லை. சாவு என்பது மண்ணுக்கோ தீக்கோ தனது உடலை இரையாகக் கொடுப்பது. நமது ஞானிகள் உடலை மண்ணுக்கோ தீக்கோ இரையாகக் கொடுத்ததாக வரலாறு கிடையாது.

அப்பரடிகள் தனது உடலை லிங்க சொரூபமாக மாற்றிக்கொண்டார். ஞானசம்பந்த சுவாமிகள் ஒளிமயமான இறைவனோடு ஐக்கியமானார். பட்டினத்தார் தனது உடலை நீரிலே கரைத்தார். வள்ளற் பெருமானும் ஒளிவடிவான இறைவனோடு இரண்டறக் கலந்தார். நமது ஞானிகள் அனைவரும் மரணமிலாப் பெருவாழ்வு படைத்தவர்கள்.

இதுகாறும் கூறியவற்றால் வள்ளற் பெருமானது கடவுட் கொள்கை ஒரே இறைவன் என்பதும், அவர்கள் காட்டிய நெறி சமரச சுத்த சன்மார்க்க நெறி என்பதும், அவர்கள் நிலைநாட்ட விரும்

பியது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை என்பதும் தெளிவாக்கப்பட்டன.

வள்ளலார் காட்டும் தத்துவம் என்ற தலைப்பிலே சிறிது சிந்திப்பதற்கான வாய்ப்புக் கிடைத்ததற்கு உங்கள் அனைவருக்கும் வாழ்த்தும் வணக்கமும் சொல்லி எழுத்தாளர்கள் அனைவரும் வள்ளற்பெருமானது கொள்கை வழி நின்று பல நல்ல தொண்டுகள்புரிய வேண்டுமென்று கேட்டு அமைவுறுகின்றேன்.

இவ்வாறு ஊரன் அடிகள் பேசி முடித்தபின் தலைவர் தொகுப்புரை ஒன்று நிகழ்த்தினார்கள். சங்கத் துணைத் தலைவர் திரு இரா. நீலமேகம் அவர்கள் நன்றி கூறக் கூட்டம் இனிது நிறைவெய்தியது.

தொகுப்பு: தமிழ்ச் செழியன்.

# எழுத்தாளனில் தொடர்கதை



திரு. S. G. ராமானுஜலு நாயுடு

தமிழகத்தின் பத்திரிகைத் துறையில் மூத்த பெருமகனாக விளங்கும் திரிசிரபுரம் S. G. இராமானுஜலு நாயுடு அவர்கள் "பிரஜானுகூலன்" பத்திரிகையின் ஆசிரியராகவும், சென்னை "சுதேசமித்திரன்" பத்திரிகையின் துணை ஆசிரியராகவும் இருந்து தொண்டாற்றியவர். மகாகவி பாரதி சுதேசமித்திரனில் துணை ஆசிரியராக இருந்தபொழுது அவருடன் இருந்தவர் திரு. இராமானுஜலு நாயுடு. உடன் இருந்தவர் மட்டுமல்ல பாரதியாரிடம் நெருங்கி தொடர்பு கொண்டு இரவு பகலாக இலக்கிய சர்ச்சைகள் செய்து மகிழ்ந்தவர் S. G. ராமானுஜலு நாயுடு. பாரதியார் காலமானபொழுது சுதேசமித்திரன பத்திரிகையில் திரு. நாயுடு அவர்கள் எழுதிய கட்டுரை பாரதியாருக்கும் திரு. நாயுடு அவர்களுக்கும் இருந்த தொடர்பை நினைவுபடுத்தும்.

திரு. நாயுடு அவர்கள் சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்னர் "ஜீவகாந்தா" என்னும் நவீனத்தை எழுதியிருக்கிறார்கள். அந்நூல் புத்தகமாகவோ, பத்திரிகைகளிலோ இதுவரை வெளிவரவில்லை. திரு. நாயுடு அவர்களின் திருக்குமாரர் திரு. வேணுகோபாலன் அவர்களின் அனுமதியுடன் அடுத்துவரும் எழுத்தாளனிலிருந்து "ஜீவகாந்தா" தொடர்ந்து வெளிவர ஏற்பாடு செய்துள்ளோம்.

எழுத்தாளனில் இந்நூல் வெளிவருவதற்கு அனுமதியளித்த திரு. வேணுகோபாலன் அவர்களுக்கு நமது நன்றி.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

## தலையங்கம் 3-ஆம் பக்கத் தொடர்ச்சி

ஒவ்வொரு சொல்லும் அதற்குள்ள சொரூபமும் அறிந்து, சொல்லும் பொருளும் சுருதியும் கலந்து அவர் பாடும்போது சங்கீதமறிந்தவர்கள், அறியாதவர்கள் அத்தனை பேர் உள்ளத்தையும் மகிழவைக்கும். அன்னாருடன் கலந்து பழகி மகிழ்ந்த நினைவுகள் நெஞ்சத்தைவிட்டு என்றும் அகலாது. இறந்தும் இறவாதவராக அமரர்புகழ் கொண்டவர், அமுருதமானவர், அமரர் மதுரை மணி அய்யர் அவர்கள், அவர்களது நினைவை நினைந்து அஞ்சலி செலுத்துகிறோம். போற்றுகிறோம் கானகலாதரர் புகழ் எங்கும் பரவட்டும். அவர் ஆன்மா சாந்தியடைய ப்ரார்த்திக்கிறேன்.

அ. வெ. ர. கிருஷ்ணசாமி.

## 5-ஆம் பக்கத் தொடர்ச்சி

மிக்க அருச்சனை பாட்டேயாகும். ஆதலால் மண்மேல் நம்மைச் சொற்றமிழ் பாடுக" என்று பணித்தருளினர் எனச் சேக்கிழார்பெருமான் கூறியுள்ளர். இதன் கருத்து என்ன? 'என்னைத் தமிழிலே அருச்சனை செய்' என்பதுதான் அன்றோ! கி. பி. ஏழாம் நூற்றுண்டிலேயே - திருநாவுக்கரசர் திருஞானசம்பந்தர் காலத்திலேயே 'தமிழ் மாலை' பாடி அருச்சித்தல் தொடங்கி விட்டது. சுந்தரமூர்த்தி நாயனருடைய காலமாகிய ஒன்பதாம் நூற்றுண்டுவரையும் அப்பர் சம்பந்தர் தேவாரங்களைத் தமிழ் மக்கள் ஓதி இறைவனைத் தமிழில் வழிபட்டனர். இதற்குச் சுந்தரமூர்த்தி நாயனுரே சான்று பகர்கிறர். "நல்லிசை ஞானசம்பந்தனும் நாவினுக்கரசரும் பாடிய நற்றமிழ் மாலை சொல்லியவே சொல்லி ஏத்துகப்பானை" என்று பாடி அவர் இந்த உண்மையினைத் தெளிவுபடுத்துகிறர். எனவே தமிழ்நாட்டிலே தமிழிலே வழிபாடு செய்யவேண்டுமென்று மக்கள் கருதுவது ஒரு புதுமையன்று. நாயன்மார்கள் வகுத்த வழியிலே, சேக்கிழார் நிலைநாட்டிய நெறியிலே நிற்பவர்கள் இதனை வரவேற்பார்கள்.

பிறநாட்டாருக்கும் பிறமொழிகளுக்கும் அடிமைப்பட்டிருந்த தமிழினம் தன் அடிமைத்தளையை அறவே ஒழித்துத் தலைமிர்ந்து மானத்துடன் வாழுங் காலத்தைத் தமிழ்மொழி மீண்டும் அசைவிலாச் செழுந்தமிழாக அயல் வழக்கின் துறைவெல்லும் காலத்தை விரைவில்வரச் செய்தலே நாம் சேக்கிழார் பெருமானுக்குச் செய்யுங் கைம்மாருகும். இதற்கு வாழ்வின் துறை அனைத்திலும் தமிழுக்கு முதன்மை கொடுக்க நாம் இன்றே, இப்பொழுதே முயல வேண்டும். வாழ்க செந்தமிழ்! வளர்க சேக்கிழார் புகழ்!



Edited & Published by the owner A. V. R. Krishnaswamy Reddiar & Printed by him at his Kannan Press, 24, Theradi Bazaar, Tiruchirapalli-2.